செய்தி வெளியீடு எண்.260 நாள்.12.4.2008

**<u>தமிழ்நாடு அரசு – சுற்றுலாத்துறை</u>**

**<u>பத்திரிகை செய்தி</u>**

**<u>தமிழகத்தில் பேரூராட்சி சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு</u>**

தமிழகத்தில் உள்ள சுற்றுலா வளங்கள்,அனைத்து வகை சுற்றுலாப் பயணிகளையும் மகிழ்விக்கும் வண்ணம் உள்ளது. சிறப்பு பெற்ற சுற்றுலா தலங்கள், மற்றும் பிரபலமாகாத சுற்றுலா தலங்கள் மேம்பாட்டுப் பணிகளை சுற்றுலாத்துறை பிற துறைகளின் ஒத்துழைப்புடன் செய்து வருகிறது. பேரூராட்சியின் ஆளுமைக்குட்பட்ட பல சுற்றுலாத் தலங்களில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்றுவருகிறது. இத்தலங்களில் பல பணிகள் நிறைவு பெற்றும், சில பணிகள் சுணக்கம் காரணமாக முடிக்கப் பெறாமல் உள்ளது. பேரூராட்சிகளின் ஆளுமையில் உள்ள சுற்றுலாத் தலங்களில் சுணக்கத்தில் உள்ள பணிகளில் உள்ள தடைகளைக் களைந்து நிறைவேற்றிடவும், வரும் காலங்களில் பேரூராட்சி நிர்வாக எல்லையில் உள்ள சுற்றுலாத்தலங்களை சிறந்த நகரமாக அல்லது தலமாக தெரிவு செய்து மேம்படுத்திட வேண்டியும், சுற்றுலாத்துறை அலுவலர்களும், பேரூராட்சி நிர்வாக அலுவலர்களும் கலந்து கொண்ட ஆலோசனை மேம்பாடு கூட்டம், சென்னை குறளகம் பேரூராட்சி ஆணையர் அலுவலகத்தில் 11.4.2008 தேதி காலை நடைபெற்றது.

**<u>பேரூராட்சிகளின் ஆணையர் மற்றும் சுற்றுலாத்துறை ஆணையர் கூட்டு ஆலோசனை.</u>**

- இந்த ஆலோசனைக் கூட்டத்தில், பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப அவர்களும் சுற்றுலாத்துறை ஆணையர் டாக்டர் மு.ராஜாராம், இ.ஆ.ப.,அவர்களும் கலந்து கொண்டு, தமிழகத்தில் சுற்றுலா

மேம்பாட்டுப் பணிகளின் செயலாக்கத்தை தீவிரப்படுத்தவும், தமிழகத்தில் பேரூராட்சிகளின் நிர்வாகத்தில் உள்ள சுற்றுலாத்தலங்களை தெரிவு செய்து, சுற்றுலாத்துறையும், பேரூராட்சி நிர்வாகமும் இணைந்து மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

<u>பேரூராட்சி சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு</u>

சுற்றுலாத்துறையும், பேரூரர்ட்சி நிர்வாகமும் இணைந்து தமிழக சுற்றுலா செல்வங்களை வளப்படுத்தி, சுற்றுலாவையும் மேம்படுத்தி, அந்த தலத்தில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, ஒவ்வொரு பேரூராட்சியும், சிறந்த சுற்றுலா பேரூராட்சியாக திகழ நடவடிக்கை எடுத்திடல் வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

**<u>ஆலோசனை கூட்டத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.</u>**

- சுற்றுலா அலுவலர்களும், பேரூராட்சி அலுவலர்களும் இணைந்து சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தியும், புதிதாக சுற்றுலாத்தலங்களை தெரிவு செய்து செயல்படுத்தக் கூடிய சுற்றுலா மேம்பாட்டு திட்ட பிரேரணைகளை அளித்து செயலாற்றிட வேண்டும்.

- சுற்றுலாத்தலங்கள் உள்ளடக்கிய பேரூராட்சி பகுதியை சுகாதாரமாக வளப்படுத்தி ‘என்னுடைய நகரம் எனக்கு பெருமை’ என்ற தாரக சொல்லை தலத்தில் குடியிருக்கும் ஒவ்வொரு நபரும் பெருமையுடன் குறிப்பிட்டு சொல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- பேரூராட்சி நிர்வாகத்தில் உள்ள சுற்றுலாத்தலங்களில் கீழ்க்காணும் அத்தியாவசிய அடிப்படை வசதிகளை உருவாக்கிடல் வேண்டும்.

- பேருந்து நிலையம், குடிதண்ணீர்வசதி, கழிப்பறை வசதி, பூங்காக்கள் கழிவுநீர் மேம்பாடு ஆக்கிரமிப்பை களைதல், மின்விளக்கு வசதி அளித்தல்.

- சுற்றுலாத்தலங்களில் மக்களின் பயன்பாடும், சுற்றுலாப் பயணிகளின் நுகர்தலையும் அலசி ஆராய்ந்து பயணிகளை கவரும் வகையில் அதற்கேற்ப நடவடிகைகள் மேம்படுத்திட வேண்டும்.

- தமிழகத்தில் பேரூராட்சிகளில் வரும் அனைத்து சுற்றுலாத்தலங்களிலும் ஒரே சீரான வழிகாட்டும் மற்றும் தகவல் பலகைகள் நிறுவிடல் வேண்டும்.

- ஒரு தலத்திற்கு வருகைதரும் பயணிகள் அருகாமையில் உள்ள சுற்றுலாத்தலங்களுக்கு சென்றிடும் வகையில் நடவடிக்கைகள் மற்றும் அதற்கான தகவல் பலகைகள் அமைத்திட நடவடிக்கை எடுத்திடல் வேண்டும்.

- புதிதாக தெரிவு செய்யப்படும் சுற்றுலாத் தலங்களை மேம்பாடு செய்ய திட்டம் தயாரிக்கும் முன்பு, அத்தலத்தின் ‘சுவாட்’ ஆய்வு (தலத்தின் தன்மை, வசதிக்குறைபாடு, சந்தர்ப்பம், செயலாக்கத்தில் பின்னைடவு) மேற்கொண்டு, அதற்கேற்ப திட்டமிடுதல் வேண்டும்.

- தற்போது பேரூராட்சிகளில் ஆளுமையில் உள்ள சுற்றுலாத் தலங்களான மாமல்லபுரம், செஞ்சி, திருக்கோவிலூர், பிச்சாவரம், தரங்கம்பாடி, குற்றாலம், ஸ்ரீ பெரும்பத்தூர் போன்ற இடங்களில் மேம்பாட்டுப் பணிகளில் ஏற்பட்டுள்ள தடைகளை விரைவாக களைந்து சுணக்கத்தில் உள்ள பணிகளை நிறைவேற்றிட வேண்டும்.
- சுற்றுலா அலுவலர்களும், பேரூராட்சி அலுவலர்களும் இணைந்து, பேரூராட்சிகளின் சுற்றுலாத் தலங்கள் என்ற புதிய வரைபடத்தை உருவாக்கிட வேண்டும்.

- பேரூராட்சி நிர்வாகத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். அப்புறப்படுத்தியதின் அறிக்கை உடனடியாக துறைத் தலைமைக்கு தெரிவித்திடல் வேண்டும்.

- பேரூராட்சி சுற்றுலாத்தலமேம்பாடு குறித்த ஆலோசனைக் குழுவினை அமைக்க வேண்டும். அக்குழுவில் சுற்றுலாத்துறை, பேரூராட்சிகள், தொல்பொருள் ஆய்வுத் துறை, நகர மற்றும் ஊரக அமைப்புத் துறை , மற்றும் பிற துறை அலுவலர்கள் குழு உறுப்பினர்களாக இருக்க வேண்டும். இக் குழு அவ்வப்போது கூடி, மேம்பாட்டுப் பணிகளை தீவிரப்படுத்திடல் வேண்டும்

- சுற்றுலாத் தலங்கள் கொண்ட பேரூராட்சி அலுவலர்கள், அந்த தலங்களுக்கு உரிய தொடர்புச் சாலைகளை தெரிவு செய்து, திட்ட மதிப்பீடு தயாரித்து, சுற்றுலாத் துறைக்கு அனுப்பிடல் வேண்டும். அதனடிப்படையில் முன்னுரிமை அளித்து ஒப்பளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- பேரூராட்சி ஆளுமையில் வரும் சுற்றுலா மையங்களில், அனுமதியின்றி நிறுவப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டும். சுற்றுலா தகவல் பலகைகள் நீங்கலாக, நகரின் அழகை மறைக்கும் விளம்பர பலகைகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும்.

சென்னை　　　　　　　　　　　　　　　　　　　　சுற்றுலா ஆணையர்
நாள் 12. 4. 2008

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.**